32. ஆதிய நாதியடங்கலு மொன்றா யெழுந்த

சோதி வடிவைக் கண்டு தொழுவதுவு மெந்நாளோ

(பொருளுரை) ஆதியும் அநாதியும் இன்னும் மெஞ்ஞானவான்களால் சொல்லப்படுகின்ற பல தோரணைகளும் ஒன்றுபட்டு வெளியாகிய ஜோதியாகிய சூக்கும வடிவைத் தரிசனை செய்து அதையே சக்கற றப்பாக நிர்ணயித்து வணங்கி நிற்கும் நாள் எந்நாளோ!

33. ஈக்கம் பெட்டி தனிலென்று மேற்றி வைத்த தீபம்போல்

நீக்கமற்று நின்றதனை திசமாக்க வெந்நாளோ

(பொருளுரை) பல இல்லித் துவாரங்கள் தெரியப்பட்ட ஈச்சவோலைப் பெட்டியில் கொளுத்திய விளக்கானது அத்துவாரக் கண்தோறும் வெளிச்சம் விழுந்து பல பல விளக்குகள் தெரிவதுபோல் ஆலத்தளவில் படையுண்டு வந்த பல ஜீவியக் கூடுகள் தோறும் கலந்திருந்து பிரகாசிக்கும் உஜூதாகிய பரம ஒளிவை உள்ளமையான றப்பென்று தெரிசிக்கின்ற நாள் எந்த நாளோ!

34. வாக்கால் மனதால் வல்ல காயம்மதனால்

நோக்கால் காணாச்சுடரை நோக்குவது மெந்நாளோ

(பொருளுரை) பெரிதாக வார்த்தையாடிக் கொண்டு திரிவதாலும், பலவேறு மாதிரியாக மனதில் எண்ணிக் கொண்டிருப்பதாலும், சரீரத்தின் அவயங்களாலும், பலவித கீமியாவைச் செய்து பல இடங்களைப் பார்ப்பதாலும் கண்டுபிடிக்க முடியாத றப்புவின் பேரொளிவை இரண்டு தாரை என்ற மகாமளவில் வாலிபக்கதிர்போல் கண்டு கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

35. ஏழுஸிபாத்தும் பொருளாமெழுஸிபத்து மஉநவிய்யாம்

ஆளு மறுஸிபத்துள் அடங்குவது மெந்நாளோ

(பொருளுரை) மகாமன்மஹ்மூதாவில் நின்று ஒளிவிடக் கூடிடிய வஸ்தைக் குறிப்பாக்கிய பிறகுஇ வெட்ட வெளியாகிய நாட்டத்தில் முச்சுடருங் கூடி ஒன்றுபட்டு நிற்கக் கூடிய நாளானது எந்த நாளோ!

56. மாலாகி யென்னுளத்தில் மயங்கி புத்தியற்று நித்தம்

மேலாம் பரவெளியை வேண்டுவது மெந்நாளோ

(பொருளுரை) உலகத்திலுள்ள பல செல்வ போகங்களின் மீது பற்று வைத்து மயங்கித் திரிகின்ற மதியானது அல்லாஹ்வின் ரஹ்மத்தான சிர்ரைத் தெளிந்ததின் பின்னால் மிகவும் மேலாம்பரமான நாட்டத்தில் ஒன்றுபட்டு மர்தபாவில் உயர்ந்து விடும் நாளாவது எந்த நாளோ!

57. சூலமாங் கருவதுதான் சுகமாமுடலாகிக்

காலு பன்னிரண்டில் நின்று காண்பதுவு மெந்நாளோ

(பொருளுரை) பன்னிரண்டு கால் என்ற பன்னிரண்டு சரங்களையுடைய சூக்கும ஜடலமாகிய நாட்டமென்ற கருவானது பூரணித்து நின்று தன்னைக் கண்டு ஆனந்தங் கொள்கின்ற நாளானது எந்த நாளோ!

58. நாலாம் வழியதனில் நலம் பெறு மஃரிபத்தில்

நாலுங் கழிந்தோடாமல் நல்குவது மெந்நாளோ

பொருளுரை) ஷரீஅத்து முதலிய மூன்றையுங் கடந்து நாலாவது வழியாகிய மஃரிபாவில் தெளிவடைந்து ஆரிபான பிறகு அந்த ஜடலத்தை நடத்துகின்ற நான்கு கருவிகளாகிய அனாஸிறுகள் நிலைமை கெட்டு ஜடலத்தை விட்டும் விலகி விடாமல் எக்காலும் வாழக்கூடிய நித்ய சாதனத்தைப் பெறும்படியான நாள் எந்த நாளோ!

59. தோலுந்துருத்தியுமாய்த் தொல்லுலகி லாகாமல்

ஆலமதுவாஹதனி லாக்குவது மெந்நாளோ

பிஞ்செழுத்தைக் கல்பு கொண்டு பிலக்கும் நாள் எந்தாளோ

(பொருளுரை) அலிபுலாம் ஹாமீம் தால் என்ற ஐந்து அச்சரங்களில் பிஞ்செழுத்தாகிய அலிபை மனதிற்கொண்டு எந்நாளும் அழியாத நித்தியமாயிருக்கின்ற நாளானது எந்த நாளோ!

92. அஞ்செழுத்து பஞ்சபூதம் அஞ்செழுத்து அல்லாஹு

நஞ்செழுத்தைக் கமலமதில் நாட்டு நாளெந்நாளோ

(பொருளுரை) ஐந்து அச்சரமென்றது ஐந்து அனாசிறுகளாகவும், இன்னும் அந்த ஐந்தும் அல்லாஹு என்னும் பஞ்சாட்சரமாகவும் இருக்கும். இதில் இருக்கப்பட்ட விஷமுடைய மகா அட்சரமாகிய ஹூவை மனம் என்னும் கமலத்தில் வைத்து நாட்டி விடக்கூடிய நாளானது எந்த நாளோ!

93. ஹாமீம் ஐன்ஸிகாபும் காபுஹாயா ஐன்ஸாதும்

காமில் முகம்மில்குரு காட்டும் நாளெந்நாளோ

(பொருளுரை) ஹாமீம், ஐன்ஸீன், காபு என்ற திவ்விய அட்சரங்களின் ஸிர்ரையும் காபு, ஹா, யா, ஐன், ஸாது என்கிற அட்சரங்களின் ஸிர்ருகளையும் பரிசுத்த காமிலான குருவாகிய ஷெய்கவர்கள் சமூகத்தில் காட்டித் தரப்படுகின்ற நாளானது எந்த நாளோ!

94. வாசிபன்னிரண்டதிலே வருகிறதும் போகிறதும்

ஊசிமுனைச்சுழியதிலே உதிக்கும் நாளெந்நாளோ

(பொருளுரை) வடகலைவாசியாகிய பன்னிரண்டு சரத்தில் ஏற்றம் இறக்கமாகிய எல்லா உபாதிகளும் ஊசியின் நுனிபோன்ற கழிமுனையின் கண்ணே உதித்து நிற்கின்ற நாளானது எந்த நாளோ!

95. ராசிமயமாய் முன்னாளில் நானென்ற அட்சரத்தான்

தேசிபோல் திரும்பி வந்து தெளியும் நாள் எந்நாளோ

அழியாத நாயன்லிகாவுக் கும்மை

அருமையோட வழக்குமுன் ஒரு மூன்று நாளாய்

மொழியெல்லாம் அரபால் முரீதோர் நாட்டம்

மொழியவே அவர் மனம் தெளியச் செய்தோரே (காரண)

ஆவென்ற செல்லாலமைத்தே ஆளும்

அல்லாஹ் ஜனாபினில் சொல்லும் அந்நேரம்

ஹூவென்ற சொல்லுடன் தக்பீர் கட்டி

கூடும் ஹள்ரத்தில் நாடிச் சென்றோரே (காரண)

குதுல்கஃதாபதினாங்கில், இஷா

தொழும் நேரம் தெளிவான வெள்ளியில் ஹிஜ்ர

த்துல்குமோராயிரத்திருனூற்றீ ரெட்டில்

சேர்ந்தேலிகா இடஞ்சார்ந்திருந்தோரே (காரண)

எண்ணிலடங்காப் புதுமை ஹால்

ஹயாத்தில் நடாத்தி வபாத்தின்பின் அதுபோல்

கண்ணில் அடங்காத கஷ்டீ கராமாத்து

காட்டியகீன் எல்கை நாட்டிய பீரே (காரண)

பூமணமேவும் தைக்காவில் வேத

புர்கானை கரந்தோனை உறுக்கிடக் கனவில்

தாமதியாதுடன் வரவே செய்த

தாதாவே தமியெனுக்காதாரம் நீரே (காரண)

வெள்ளி இரா ராத்திபோதும் அந்த

வேளையில் பைத்தொன்று மறக்கவும் பீர்பேர்

உள்ள பிள்ளையை தர்காவுள்ளிருந்

தொரு சத்தம் விழித்தழைத்துரைத்தவர் நீரே (காரண)

காபிர் வதைத்த கறுப்புக் குயிர்

காட்டென புத்திடம் கேட்டும் வராமல்

தாபத்துடன் உம்மைக் கேட்க சீவன்

தானெடுத்தோட ஈமான் கொடுத்தோரே (காரண)

மரக்கலம் இழந்துங்கள் இளைய, மகன்

மயங்கி கங்கையில் விழுந்தியங்கிடும் பொழுதில்

உருக்கமாய் சடுதியிலெடுத்தே ஓடும்

உருவினிலேற்றிய குருவானோர் நீரே (காரண)

கரி பெருத்திடும் கானிலோர்நான் மத

கனிருமதினைய சேயினை கடுந்தடுத்தே

வர உமதடி பரவுடன் வந்ததை

வருத்தம் செய்தெடுத்தோட துரத்தி விட்டோரே (காரண)

இருநூறும் எழுபதும் இடையில் நாற்ப

திலங்கும் திருநாமம் துலங்க வந்தோரே

ஒரு நூறும் அறுபத்திமூன்றின் இல்ம்

உடையோனை ஆள்வது கடனுமக்காமே (காரண)

மஹ்மூது சுதன் அப்துல் காதிர் மக

வாக என் தந்தையாக வந்தோரே

முஹ்யித்தீ னெனும்  நாமமுடைய நிறு

பொய்யுங்களவும் பொருந்தியிருக்கிற

புத்தியை நந்தி பொருட்டதினாலே

மெய்யாய் விளக்கியே வேதப் பொருளதை

விஸ்தாரமாகவே உஸ்தாது கிருபையால் - கல்பை

அல்லும் பகலுந்தா னன்பத்தோரட்சர

மானபொருளதை நேமத்திலாக்கியே

சொல்லுஞ் செயலு மறவுமொன்றாகவே

தோத்திரஞ் செய்ததைப் பார்த்திருந்தே கொண்டு – கல்பை

வாசி பனிரெண்டு காலா லெழுந்திடும்

வஸ்துவை நன்றாய் தெளிந்து கொண்டாடியே

நாசியினாலாறு கல்பானதி லொன்றை

நாட்டமாய் மூச்சுடன் கூட்டியொன்றாக்கியே – கல்பை

இருளிலிருந்த பொருளை வெளியாக்க

எண்ணெயுந் திரியு மெரியம் விளக்குமாய்

குருதரும் பொருளு முடலு முயிருங்

கூட்டியே மூச்சுடன் நாட்டியே தீபத்தால் - கல்பை

நாட்டந்தருமின்ஸான் காமில் முகம்மிலாம்

நந்தியாம் ஸெய்யித் முஹம்மது புகாரியைத்

தேட்டமா யெப்போதும் புத்தியில் நாட்டியே

சிந்தை செய்தவுடன் வந்தருள செய்குவார் - கல்பை